Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஇல (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எரு] யாழ்ப்பாணம்:- சோபகிருதுஇல ஆனி மீ உகஉ வெள்ளிக்கிழமை (5 July. 1963) [இல-கச]

## மாயாவாத தும்சகோளரி நா. கதிரைவேற்பிள்ளை ஞாபகம்

[பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை]

(முற்றொடர்-14)

### சங்கரர்

இந்தச் சரீரத்துக்குள்ளே 'நான்', "நான்" என்று ஒன்று சொல்லிக் கொண்டிருக்கின்றது- அதை அறி. அது பிரமம் என்பது சங்கரரின் போதனை.

இந்தச் சரீரத்தையே "நான்' என்று சொல்லிக்கொண்டிருக்கின்றோம். சரீரத்தின் பெயரைச் சொல்லி அழைக்க 'ஏன்' என்கின்றோம், உண்மையில் 'நான்' என்பது இந்தச் சரீரமேயன்று. சரீரத்தின் வேறாக 'நான்' என்பதை எவன் காண முயற்சி செய்து காண்கின்றானோ, அவன் தன்னைப் பிரமமாகவே காண்பான். நீ யார் என்று வினவினால், 'நான் பிரமம்' என்பான். இதனை வேதாந்தமாகிய உபநிடதங்கள் ஒப்புக்கொள்ளும்.

பந்தநிலையில் இந்தச் சரீரத்தை 'நான்' என்கின்றோம். அப்படியே முத்திநிலையில் 'நான் பிரமம்' என்போம்

ஆன்மா சார்ந்ததன்வண்ணமானது; பளிங்குபோன்றது. பந்தநிலையில் சரீரத்தைச் சார்ந்தும், முத்திநிலையில் பிரமத்தைச் சார்ந்தும் தோன்றுவது.

முத்திநிலையில் பிரமத்தைச் சார்ந்து பிரமமாய்த் தன்னைக் காணும் சாதகனுக்கு, அப்பால் போதனை வேண்டுவதில்லை. 'நான் சரீரம்' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது, 'நான் சரீரமேயல்லேன்' என்பதை உணர்த்துவதிலும் கோடானுகோடி மடங்கு தெளிவாக, 'நான் பிரமம்' என்று காணும் போது 'நான் பிரமம் அல்லேன்' என்பதை உணர்வன்.

'கண்ட இவை
அல்லேன் நான்'
'காணுக் கழிபரமும்
நானல்லேன்'

என்பது சிவஞானசித்தியார்.

வேதாந்த மகா வாக்கியங்களில் 'அசி' பதம் முக்கியமானது. குரு 'அது நீ யாகின்றாய்' என்பர். 'தத்துவம் அசி மகாவாக்கியம், தத் - அது துவம் - நீ. அசி - ஆகின்றாய் ஆகின்றாய் என்பதன் பொருள் பிரமமயம் ஆகினாய் என்பதே.

சிவமயம் என்று இட்டுக்கொள்கிறோம், சீவன் சிவமயமாக வேண்டும் என்பதே பொருள்.

'சிவமாக்கி எனை ஆண்ட' என்பது திருவாசகம், அசி

தொடர்ச்சி 2ம் பக்கம்

## நற் சிந்தனை

—:—

ஊரும் பேருமில்லா
ஒருவன் திருவடியை
நீரும் பூவும்போட்டு
நெக்குநிற்ப தெக்காலம்

## திருப்பணிக்கு நன்கொடை

திருக்கயிலாய பரம்பரை, திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ. 21-வது மகா சந்நிதானம் அவர்கள் மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வர சுவாமி தேவஸ்தான திருப்பணிக்கென ரூபாய் 50 ஆயிரம் நன்கொடை அளித்துள்ளார். திரு. மா, பா. "தினமணி"நிருபர்.

## அருளுக்காக அழுதார் மணிவாசகர்!

முற்றொடர்—2

இறைவன் ஒருவன் எல்லோருக்கும் பொதுவானவன்; எங்கும் ஒளிப் பிழம்பாய் நின்று அருள வெள்ளத்தை அள்ளி வழங்குபவன் — அவன் கருணை வெள்ளத்தில் அமிழ்ந்த எல்லா இனத்தவருக்கும் உரிமையுண்டு. அருள் வெள்ளம் ஒன்றுதான்; அது ஊற்றெடுக்கும் இடமும் ஒன்றுதான்; மலையில் இழிந்து மாக்கடல் நோக்கி நிலவரை இழிதரும் பல்யாறு போல மகேஸ்வரனிடமிருந்து ஊறிப் பெருகி உயிரினங்களை நோக்கி அருள் வெள்ளம் பாய்கிறது. தண்ணீரை ஆங்கிலத்தில் 'வாட்டர்' என்றும், வடமொழியில் 'ஜல' என்றும், சிங்களத்தில் 'வத்துற' என்றும் கூறுவது போல, இறைவனும் இடத்துக்கிடம் பெயரால் வேறுபட்டு அருளால் ஒருவனாகி நிற்கின்றான், இதனை "தென்னாடுடைய சிவனே போற்றி" என்று அழைத்து வணங்கி 'எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" எனப் பொதுமை பேசுகின்றார் மணிவாசகர்.

குழந்தையின் வாழ்வில் அக்கறை கொண்ட தாய், அது விரும்பினாலென்ன, விரும்பாவிட்டால் தான என்ன அடித்தடித்து நல்லதை ஊட்டி நலம சேர்ப்

"ஈழத்துச்சிவானந்தன்'



1 இலட்சம் ரூபா செலவில் நல்லூர் கந்தசுவாமிகோவிலுக்கெனக் கட்டி முடிக்கப்படவிருக்கும் தேரின் திருப்பணிஆரம்ப பூசையின்போது கோயில் பரிபாலகர் சண்முகதாசமாப்பாண முதலியார் அவர்கள் தேர் செய்து முடிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள ஆசாரியாருக்கு வெற்றிலை வழங்குகிறார்.

முந்தைகாண் மூவரினும் முதலா னான்காண்
மூவிலைவேல் மூர்த்திகாண் முருக வேட்குத்
தந்தைகாண் தண்கடமா முகத்தி னாற்குத்
தாதைகாண் தாழ்ந்தடியே வணங்கு வார்க்குச்
சிந்தைகாண் சிந்தாத சித்தத் தார்க்குச்
சிவனவன்காண் செங்கண்மால் விடையோன் றேறும்
எந்தைகாண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவனென் எண்ணத் தானே,

x x x

ஊனாகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானாதியானபொருளாய்மதியாகிவெய்யோன்
றானாகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானான்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்.

## திருவாசகம்

[சைவபரிபாலன சபை ஆதரவில் நாவலர் மண்டபத்தில் கோண்டாடப்பட்ட மாணிக்கவாசகர் குருபூசைத் தினத்தன்று ஸ்ரீ, வ. குகசர்மா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்]

அன்பினாலும் இறைவனைப் பிரிந்த ஆற்றாமையினாலும் எழுந்த பாடல்களே திருவாசகமாகும். உலகத்திலே மக்களாய்ப்பிறந்த யாவரும் இன்பத்தையே விரும்புகிறார்கள். ஆனால் உண்மையான இன்பம் எது என்பதையே அறியமுடியவில்லை. திசை மயக்கமுடைய ஒரு புது ஊரில் கிழக்குத்திசையை நோக்கிச் செல்ல விரும்பிய ஒருவன்தான் அத்திசையே நோக்கிச் செல்வதாக நினைத்துக்கொண்டு மேற்குத்திசையை நோக்கிச் செல்வதுபோல நமது செயல் உள்ளது. இன்பத்தை விரும்பும் நாம் நிலையான இன்பத்தை விரும்பாமல் முன் இன்பமாகத்தோன்றிப் பின் துன்பத்தைப் பெருமளவில் தரும் சிற்றின்பங்களையே விரும்புகின்றோம். இறைவனையடையும் இன்பமே மிகச்சிறந்த இன்பம் என்பதனை நாயன்மார் பலர் சுட்டிக்காட்டிச் சென்றுள்ளனர். "சிறந்த இளவேனிற் காலத்தே மாலைக்காலமும் ஆகாயத்திலே பிறைச்சந்திரனும் தோற்றும் நேரத்தில் வண்டுகள் மொய்க்கும் மலர்களையுடைய தடாகக்கரையில் இருக்கும்பொழுதில் குற்றமில்லாத வீணையின் இசை நாதமும் சேர்ந்தால் எவ்வாறு இருக்குமோ அவ்வாறிருக்கும இறைவன் இணையடி இன்பமென நாவுக்கரசர் கூறுகிறார். மணிவாசகரோ இறைவனை ஆனந்தத் தேனாகவே உருவகிக்கிறார், உலகத்திலே சில காட்சிகளைக் கண்ணால் பார்ப்பதால் ஆனந்தமேற்படும். சிலவற்றைக் காதால் கேட்பதால் இன்பமேற்படும். ஆனால் இறைவன் தரும் இன்பமோ அவ்வாறானதல்ல; "நினைதொறும் காணதொறும், பேசுந்தொறும எப்பொழுதும், அனைத்தெலும்பு உள நெக, ஆனந்தத்தேன் சொரியும" என மணிவாசகர் சுட்டிக்காட்டுகிறார்.

உலகத்திலே சிறந்த அன்பு தாயன்பு என்று சொல்வார்கள். ஒரு பிள்ளையை எவ்வாறு வளர்க்கவேண்டும். எந்த நேரம் பால் கொடுக்க வேண்டும். என்று தன் பிள்ளையின் நினைப்பிலே இருப்பாள் தாய். ஆனால் நித்திரை, அவசியம் செய்யவேண்டிய வேறு கருமம் இவற்றால் தாய் தன் அன்புக் கடமையில் சிறிது தவறலாம்; ஆனால் இறைவனோ நம்முடைய

(தொடர்ச்சி 4 பக்கம்)

பதுபோல் — எம்பெருமானாகிய இறைவன தன உயிர்களுக்கு, அவை பொய்யாய்த் திரிந்து வேதனைப்படும்போது இரங்கி அருள்பாலித்து அரவணைப்பான் என்பதனை அற்புதப்பத்திலே அருமையாகச் சொல்லுகிறார்,

"நடித்து மண்ணிடைப்
பொய்யினைப் பலசெய்து
நான் எனது எனும் மாயக்
கடித்தவாயிலே நின்று
முன்வினை மிகக்கழறியே
திரிவேனைப்
பிடித்து முன்னின்று
அப்பெருமறை தேடிய
அரும்பொருள் அடியேனை
அடித்து அடித்து அக்காரம்
முன்தீற்றிய அற்புதம்
அறியேனே."

உயிர் உருவம் எடுப்பதற்கு

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சோபகிருது ஞு ஆனி மீ
கசஉ வெள்ளிக்கிழமை

## இருந்தபடி விடவும் இடமில்லையா?

கல்விக் கழகங்களையெல்லாம் அரசினர் கைப்பற்றியதின் விளைவு காலஞ் செல்லச் செல்லக் கவலையைப் பெருக்கிக்கொண்டே வருகிறது. பரோபகார சீலர்கள் பலர் அந்நாட்களிற் பாடசாலைகளையும் நிறுவிப் பழைய பண்புக்கமைய அணித்தாக ஆலயங்களையும் அமைத்து அவையெல்லாம் செம்மையாக நடைபெற வருவாய் அளிக்கும் வகைகளையும் வகுத்துத் தருமபரிபாலன ஒழுங்குகளையும் உறுதிப்படுத்தி அக் கைங்கரியங்கள் என்றும் நின்று நிலவும் என எண்ணியபடியே இவ்வுலக வாழ்வு நீத்தனர். காலத்தின் கோலம் மாறுமென்றும் அதிலும் கல்வியையும் அதோடு இணைபிரியாதிருக்கும் அறத்துக்குரியநிலையங்களின் அமைப்பையும் வேறுபட்ட அரசியல் ஆட்சி பாதிக்கும் என்றும் கனவிலும் நினைத்திலர். பிற்காலம் பொற்காலமாகும் என்று நினைத்தார்களேயன்றி கற்காலமாகச் சென்று தேய்ந்திறும் என ஒருபொழுதும் எண்ணினர் இல்லை. அந்தச் சந்தேகம் இருந்தால் அதற்குத் தக்க வழியைக் காட்டியிருப்பர்,

ஈழத்தமிழகத்திற் சைவ சீலர்கள் நிறுவிய பெருங் கல்விக் கழகங்களெல்லாம் சைவம் வளர்க்கும் மக்களை வாழ்வாங்கு வாழப்பழக்கும் மன்றங்களாக அமைவதற்குரியவையாய் ஓங்கவேண்டிய ஒழுங்குகளுடன் விளங்கி வந்தன; சிவராத்திரி, நவராத்திரி முதலிய புண்ணிய புனித தினங்களையும், நால்வர் திருநாட்களையும், இவைபோன்ற வேறு தனிச்சிறப்புவாய்ந்த நிகழ்ச்சிகளையும் கல்விக் கழகங்களே பேணிவருவதற்குப் போதிய பொன்னும் பொருளும் சட்டப்படி சாதனங்கள்மூலம் வகுக்கப்பெற்றன. அரசினர் கல்விக்கழகங்களை ஆட்சி செய்ய எடுக்கும் வரைக்கும் இந்தத் தரும கைங்கரியங்கள் முட்டின்றி முன்னோர் இட்டபடி நடைபெற்று வந்தன. ஆனல் இப்பொழுதோ அரச அங்கமாய் அமைந்து விட்டனவாம் கல்வி நிலையங்கள். ஆகவே அறஞ்செய்வதலலச் செய்ய விரும்பும் தன்மையுமே இருத்தல ஆகாதெனும் கருத்துத்தோனற, கருமங்கள் செயலாற்றப் பெறுகின்றன. கற்றுத் தேறுதல் வேண்டும் மக்கள் எல்லாம், சமய அடிப்படையிலேயே அக்கல்வியும் வேண்டும்; இந்நாட்டுப் பண்பு விளங்கவேண்டும் என்றெல்லாம் வாயலங்காரஞ் செய்துகொண்டே கல்வியின் மூலவேரையே களைந்துவிடக் கங்கணங்கட்டி நிற்கும் அரசைப் பற்றி என் சொல்வோம். பாடசாலையையும் அதற்குரிய உபகரணங்களையும் நிலத்தையும் அரசினர் எடுத்தாலும் என் செய்வோம் என்றிருக்கலாம். குறிப்பிட்ட அறத்தை உரியகாலத்திற் செய்வதற்காகக் கல்விக் கழகங்களுடன் இணைத்துத் தருமப் பொருளாக முன்னோர் ஈந்தவற்றையுமா அரசினர் கைப்பற்றுதல் வேண்டும். மக்கள் ஆட்சியாம்! மக்கள் மனத்துக்கு மாறாகச் செயலாற்றமாட்டார்களாம். என்ன எழுச்சியான பேச்சு! மக்கள் மனம் புண்ணாகும்படி விபரீதங்களை விளைவிக்கும் செயல்களைச் செய்யும்பொழுது ஊரவர்களைக் கேட்டார்களா, உரிய தரும பரிபாலகர்களுடன் கலந்துரையாடினர்களா? நம் பிக்கைப் பொறுப்பை நம் மூதாதைகள் நம்மிடத்தில் விட்டார்கள். நாம் பாராளு மன்றத்துக்கு எங்கள் சார்பாக உறுப்பினரை உபகரித்தோம். பாராளுமன்றமோ ஆராயாது சட்டமியற்றி அணுவளவும் வழமையைத் தனிப்பட்ட நிலைமையை ஆய்ந்து பாராது செயலாற்றும் ஆட்சியை அமைத்து அறஞ்செய்ய விரும்பாதே என்ற புதுக்கொள்கையை நிலைநாட்டுகின்றது. மக்களும் அயர்ந்து நிற்கின்றனர். முன்னோருக்குச் செய்யும் நன்றி என்னே!

நேயர்கள் நெஞ்சம்

# திரை போட்டு உண்பதை நாவலர்பெருமான் வெறுத்தாரா?

—————:0:—————

## திரு. செ. சின்னத்தம்பிக்கு கேள்வி

14-6-1963-ல் வெளிவந்த இந்துசாதனத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் விழாவில் வட்டுக்கோட்டைமுதலியார் திரு.செ.சின்னத்தம்பியவர்கள் நிகழ்த்திய விரிவுரையில் கீழ்க்காட்டியபடி பேசினர்களென வாசித்தேன்.

1. "சிலர் வழிபாடுமாத்திரம் சைவம் என்று எண்ணுகின்றனர்; இது தவருகும. வழிபாட்டுடன் சமூகப் பணி செய்வதுதான் சைவமாகும்".

2. "திரை போட்டுச் சாப்பிடுவதுதான் சைவம் என்று சிலர் எண்ணுகிருர்கள்; பசித்தவன் காணுமல், சாப்பிடும் ஒரு முதலாளித்துவ முறையே—ஈயாத நெறியே—திரைபோட்டுச் சாப்பிடும் சைவமாகும். நமது சமூகத்தில் பல பழக்க வழக்கங்களை நாம் மாற்றியேயாக வேண்டும்.

அதற்கு நாவலர்பெருமான் காட்டிய நெறியில் நாம் பணிபுரிவோமாக. திருமுறைகள்:- பெரிய புராணம் எங்கள் ஞான நூல்கள், ஆகவே இவற்றை நாம் போற்றிப் படித்து வாழ்வோமாக".

மேலும் 11-6-63-ல் யாழ்ப்பாணம் நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற விவேகானந்த சுவாமிகளின் சேவைப் பாராட்டு விழாவிலும் நன்றி கூறப்போனவர்:

"சைவ சமயத்தில் பல ஊழல்கள் இருப்பதாகவும், அவைகளில் ஒன்று "திரை போட்டுச் சாப்பிடுவது சில சைவர்களின் வழக்கம். அவ்வழக்கம் மாற்றியேயாக வேண்டும்" என்றும் சொன்னர் என அறிகிறேன்.

அன்பர் திரு செ. சின்னத்தம்பியவர்களே!

திரை போட்டுச் சாப்பிடுவது சில சைவர்களின் வழக்கம். அவ் வழக்கம் மாற்றியேயாகவேண்டும் என்று மேலே சொல்லப்பட்ட திகதிகளில், இடங்களில், நீங்கள் சொன்னது மெய்தானு? அவ்வழக்கம் கைவிடப்படவேண்டுமென்றும், அது ஒரு முதலாளித்துவ முறையென்றும், ஈயாநெறியென்றும் சைவ சமயத்திலுள்ள பல ஊழல்களில் அது ஒன்று என்றும் நீங்கள் பேசியது உண்மைதானு? நீங்கள் சொன்னது மெய்யானுல் அந்த வழக்கம் ஊழல் வழங்கம் தானு? இன்னும் என்னென்ன வழக்கங்கள் சைவ சமயத்தில் ஊழல்போல் உமக்குத் தோற்றுகின்றன? அவ்வழக்கங்களை மாற்ற அதிகாரம் உண்டா?

3. நாவலர்பெருமான் போதித்ததற்கு முற்றிலும் மாருய்க் கண்டனப் பேச்சுகள் நடத்தும் நீங்கள் ஏன் உங்கள் பேச்சுகளுக்கு அவரை இழுத்தீர்கள்? அவரை நீங்கள் இழுத்தது சைவ சமயத்தைத் தெரியாதவர்களை ஏமாற்றும் வஞ்சகத் தீய நோக்கமல்லவா? நீதியா?

4. போசன விஷயத்தில் அவர் இரண்டாம் சைவ வினுவிடையில் எழுதியதிற்கு முற்றிலும் மாருயல்லவா திரைபோட்டுச் சில சைவர் சாப்பிடுவதைக் கண்டித்துப் பேசினீர்கள்? இவ்வளவு வயதிற்கும் ஷெ 2-ம் சைவ வினுவிடைப் புத்தகத்தை நீங்கள் வாசிக்கவில்லையென்பது உங்களு[illegible] சொல்லால் யாரைக் கருதினீர்? பிராமண குலத்தவரையும் சிவதீட்சை பெற்றவர்களையுமா கருதினீர்கள்? இந்தியாவில் தனித்தமிழ்க் கட்சியார் (i) பிராமணத் துவேஷம் (ii) சமஸ்கிருதத் துவேஷம், வடமொழிச் சிவாகமத் துவேஷம்உடையவராய் இருக்கிருர்கள். அந்தத் துவேஷ வாடை உங்களுடைய மேற்படி பேச்சுக்களில் மறைவாய்த் தவழுகின்றதல்லவா........?

இத் திகதி தொடங்கி இரு வாரங்களுள் இதற்குரிய பதிலை இந்துசாதனப் பத்திரிகையில் தயவுசெய்து வெளியிடுமாறு வேண்டிக் கொள்ளுகின்றேன்.

வே. கந்தையா

ஆறுமுகநாவலரின்
திருத்தொண்டு சேவாநிலையம்.
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.
3-7-1963

## மாயாவாத தும்சகோளரி

(முதற்பக்கத் தொடர்ச்சி)

பதம் தமிழில் ஆபதம் ஆம். ஆக்கி - ஆபதம்.

சங்கரர் 'நீ பிரமம், பிரமம் ஒன்றே' என்று போதித்தார்.

'ஒன்றென்ற தொன்றே காண்' 'ஒன்றேபதி' என்பது சிவஞானபோதம்.

சங்கரரின் போதனையை உலகம் ஏற்றுக்கொண்டது. உபநிடதம் மேற்கொள்ளப்பட்டது. புத்தம் ஓட்டம் எடுதத்து. இந்த அளவில் போதனையால் ஒரு பிழையும் இல்லை

உபநிடதம் தம்மை அணுகக்கூடியவர்களுக்கு அணுகிக் கேட்ட இடத்துப் போதிப்பது. கேளாச்செவியர்களுக்கு அவர்கள் இருக்குமிடம் தேடிச்சென்று ஜனநாயக முறையை அநுசரித்துப் போதிப்பது அன்று. கழுதைக்கு உபதேசங்கேட்டால் என்ன ஆகும் என்பது தெரிந்தது. சங்கரரின உபதேசங்கள் புத்தத்தை ஓட்டுமுகமாகச் சீர்திருத்தம்பறறி எழுந்தனவாதலின், ஜனநாயக முறையை அநுசரித்தனவாயின.

நீ பிரமம் ஆகின்ருய் என்ற அருமந்த போதனை, சாதகரல்லாத சாத்திரப்படிப்பாளிகளிடத்தில் அசிபதம் போய், "நீ பிரமம் ஆகையால், பிரமந்தான் ஒருநாள் லீலை (விளையாட்டுக்) காரணமாகச் சீவபேதங்களாயிற்று" என்ற முடிபை எய்தியது. சீவபேதங்கள் பிரமத்தின் பிரதிவிம்பங்கள்; கடாகாயங்கள்; கயிற்றரவுகள் என்றெல்லாம் வியாக்கியானங்கள் எழுந்தன. 'நம் செயல்களெல்லாம் வெறும் உடம்புச் சேட்டைகள்: நாம் சுத்தப்பிரமம்' என்று உபதேசிக்குச் சுவாமியார்கள் தோன்றினுர்கள். அவிவேகிகளும் சாமியார்கள் ஆவதற்கு வாய்ப்பு உண்டாயிற்று. ஆடு கோழிச்சாமிகள் கள்ளுச் சாராயச் சாமிகள்; அபின் கஞ்சாச் சாமிகள்; கோயில் கும்பிடாச்சாமிகள் சிவ சின்னங்களை வெறுக்கும் சாமிகள் எத்தனை எத்தனை பேர்.

ஒன்றை நினைக்க மற்ருென்ருகிய மாயாவாதம் தாண்டவம் புரிவதாயிற்று. சீர்திருத்தப் போதனைகள், 'ஆற்றிற் கிடந்த முதலை கண்டஞ்சிப் போய், ஈற்றுக் கரடியை எதிர்ப்பட்டவாறு' ஆதல் சரித்திரப் பிரசித்தம்.

"மகாத்மா காந்தியடிகள் நவகாளியில் கண்ணீர்விட்டார். 120 வருடம் உயிர் வாழ்ந்து நன்மை செய்ய விரும்பியவர் 120 நிமிஷமும் உயிர் தரிக்க விரும்பாத நிலையை எய்தினர். ஒரு கிழவர், தம மகளையும் மகள் வயிற்றுச் சிசுவையும், மருமகனையும் வதைத்து, சிசுவை எடுத்துத் தாய் தந்தையரின் வாயில் திணிப்பதைக் கண்ணுலே கண்டவர். அக் கிழவர் காந்தியடிகளின் கால்களைக் கட்டிக்கொண்டு மகாத்மாஜீ ஏதும் அற்புதத்தால், இந்தக் கொடுமைகளை நிறுத்தியருளுக மகாத்மாஜீ என்று அலறி உயிர் சோர்ந்தார். அப்பொழுது, 'என்னிடம் அற்புதம் இல்லை; நான் தெய்வம் அல்லேன்; நன்மை என்று நினைத்து ஏதோ செய்தேன்; மற்ருென்ருய் விளைந்துவிட்டது' என்று கூறிக் கிழவருடன் சேர்ந்தழுதார்மகாத்மா"

இது ஹரிஜன் பத்திரிகையிற் கண்டது. மகாத்மா நடத்திய பத்திரிகை அப் பத்திரிகை.

—தொடரும்.

### மணவாளக்கோலம்

சரவண தெங்கங்குளம் நாச்சிமார் கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மீனுட்சிஅம்பாளின் மணவாளக்கோலம் எதிர்வரும் 24 உ (8-7-63) திங்கட்கிழமை யன்று நடைபெறும். அம்பாளுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் விசேஷ அபிடேகாராதனைகளும் சுவாமி வீதி வலம்வருதலும் மு. ப. 7க்கும் பி ப, 2 மணிக்கும் இடையில் உள்ளசுப நேரத்தில் நடைபெறும்.

### 7-ம் ஆண்டு நிறைவு விழா

அகில இலங்கை இந்துமாமன்றம் 7-ம்ஆண்டு நிறைவு விழா நாளை 22-ம் நாள் (6-7-63, சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மாமன்றத் தலைவர் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

நிகழ்ச்சிகளில் திருமதி. சரோஜினி தனபாலசிங்கம் திரு. தி மாணிக்கவாசகர், திரு. அ. வேல்சாமி, திருமதி பரஞ்சோதியம்மா இராசமாணிக்கம், சைவ மங்கையர்கழக இசைக்கல்லூரிமாணவிகள் ஆகியோர் பங்குபற்றுவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## கந்தபுராணவுரை வெளியீட்டு நிதி

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் வெளியிடப்படவிருக்கும் கந்தபுராண வுரை வெளியீட்டுக்கு நன்கொடையாகவும் சந்தாவாகவும் இதுவரை பொருளுதவிய அன்பர்களின் பெயர்களை முன் வெளியிட்டுள்ளோம். உரை வெளியீட்டுக்கு 40000/- க்கு மேல் வேண்டியிருப்பதால் தயவு செய்து அன்பர்கள் இந்தப்புண்ணிய தொண்டில் பங்குபற்றித் தங்களால் இயன்ற பொருளுதவியைப் புரியுமாறு விநயத்துடன் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம்,
1-1-63.

க. வேலுப்பிள்ளை,
தனுதிகாரி,
கந்தபுராணவுரைவெளியீட்டுக்குழு

| | |
|---|---|
| இந்துசாதனம் 31-5-63ல் வெளிப்படுத்தியதொகை | 65[illegible]-00 |
| திரு. நா. கனகசபாபதி பூரணவாசா, 7 லோங்டன்வீதி, வதுளை | 26-00 |
| திரு. அ. தில்லையம்பலம் J. P. 'தில்லைவாசா" சங்கரத்தை | 250-00 |
| ஸ்ரீலஸ்ரீ R. K. பூரணானந்தக்குருக்கள் வில்லூன்றிக் கந்தசாமி கோவில் திருகோணமலை | 10-00 |
| திரு. சோ. நடராசா 649, காவ்லொக்வீதி கொழும்பு | 10-00 |
| திரு. C.N. விசுவலிங்கம் 'விசுபபனவாசா' நாரந்தனை | 26-00 |
| திரு. அ சபாபதிப்பிள்ளை புகையிரதநிலையம் ரேசாலை | 26-00 |
| திரு. செ. சின்னத்துரை ஆசிரியர் ஏழாலை மேற்கு | 10-00 |
| | 1013-00 |

# அருளுக்காக அழுதார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்பே இறைவன் உயிரோடு கலந்துவிடுகிறான். தன்னை நினைந்து உருகும் அடியாரை நையவைத்து, அவர் வினைகளை நில்லாது நீங்கவைத்து கருணையினால் ஆண்டுகொள்கிறான். இதை:-

"உருத்தெரியாக் காலத்தே
உள்புகுந்தென் உளம்மன்னி
கருத்திருத்தி ஊன்புக்குக்
கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்தருத்தி மேயானைத்
தித்திக்கும் சிவ பதத்தை
அருத்தியினால் நாயடியேன்
அணிகொளதில்லைகண்டேனே"

என்கிறார்,

இறைவன் தாயினும் நல்ல தலைவன் - தாயிற்சிறந்த தயாவான தத்துவன் - அல்லல் பிறவியை அறுப்பான். அவனது கண்ணுக்குக் கஷ்டப்படும் சீவன்களே முதலில் தெரியும், துன்பப்படும் மகவுக்குப் பணிவிடை செய்த பின்பே பெற்றவள் மற்றைய பிள்ளைகளைப் பார்ப்பாள். இறைவனும் இன்னல்படும் குழந்தைகளைக் கூர்ந்து நோக்கி அவைகளின் அல்லல்களைக் களைய விழைபவன். கடையவனையும் கருணையினால் கடந்து ஆட்கொள்ளும் ஆண்டவன் மணிவாசகரை ஆட்கொண்டு அருளால அமுதக்கடலில் அமிழ்த்தி ஆனந்தப்படுத்தினார். அவர் திரு அம்மானையில் தம் அனுபவத்தைக் கூறுகிறார்.

"கல்லா மனத்துக்
கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன்
பெருந்துறையான்பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து
கனிஆககித் தன்கருணை
வெள்ளத்து அழுத்தி
வினைகடிந்த வேதியனைத்
தில்லைநகர் புக்குத்
திருச்சிற்றம் பலம்மன்னும்
ஒல்லை விடையானைப்
பாடுதுங்காண் அம்மானாய்."

மாணிக்கவாசகர் ஆனந்தித்தத்திலும் பார்க்க அழுதவையே அனந்தம் அவரது அருட்பனுவலில் இழையோடும் துடிப்பு இதற்குச் சான்றுபகர்கின்றது. இறைவனை நாடிச் சென்றார் அருள் கேட்டார்- அழுது கேட்ட அவருக்கு ஆண்டவன் அள்ளிக் கொடுத்தான். மாணிக்[illegible]

கவாசகர் வாரி விழுங்கினார் விக்கினார். விக்கலுக்குக் காரணம் உணவல்ல, உணவைத் தந்த உள்ளமுமல்ல, உடல் கோளாறே விக்கலுக்கு மூல காரணம். மணிவாசகருக்கு அருள் அமுதம் விக்கியது. விக்கலுக்கு வினைதான் காரணம் - வினைகடியும் வேதியன் அல்ல. வினையைப் போக்க வேண்டியவனை வினயமாகக் கேட்கிறார் தழங்கரும் தண்ணீரை. அழுங்குகின்ற அடியவரை ஆண்டவன் விடுவானா. இதோ அந்த அடைக்கலக்குரல்:-

"வழங்குகின்றாய்க்கு
உன் அருளார் அமுதத்தை
வாரிககொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன்
வினையேன் என்விதி
இன்மையால்
தழங்கரும் தேன் அன்ன
தண்ணீர் பருகததந்து
உய்யக் கொள்ளாய்
அழுங்குகின்றேன் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே"

மணிவாசகர் அழுதார், தன் நெஞ்சைப் பிசைந்து, ஆண்டவனைக்கண்டு அவன் அருளைப்பெற அவர் அவாவினார்.

அழுது குறைகளை முறையிடும் ஆலயங்களில் இன்று ஆடம்பரமா? வேண்டுவார் வேண்டுவதைஈபவன் சந்நிதானத்தில் வேடிக்கையா? மறைந்த மணிவாசகரின் தெய்வீக சத்தி நன்நிலைமைக்கு உதவி; தித்திக்கும் சிவபதத்தை மூத்திதரும் மாமருந்தைக் காண வாய்ப்பளிக்காதா?

## பொங்கல் விழா

இன்று வெள்ளிக்கிழமை இரவு நாயன்மார்கட்டுப் பதியில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் பட்டாணி வயிரவரென வழங்கும் ஆதி வயிரவருக்குப் பொங்கல் விழா நடைபெறும்.

## தமிழ்விழா

நல்லூர் ஆசிரியப்பயிற்சிக் கலாசாலையில் நேற்றைய தினம் வியாழக்கிழமை நடைபெற்ற தமிழ்விழாவில் ஈழத்துக் கவிஞர்களின் [illegible]மும், கம்பராமாயண[illegible] கருத்தரங்கமும் இடம்பெற்றன.

---

இவ்வாரம் 7-7-63 — 13-7-63

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

இளைய சகோதரர் உதவி பழய முதலீட்டில்நல்வருவாய்அதிகசெலவுகள் சுகவீனம்ஆதியஏற்படும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

கல்வி வெற்றி, பணஇலாபம் புகழ், இனத்தவருடன் சண்டை கண்டுணப்கள் உண்டாம். முதல் நாளை எச்சரிக்கையாய்க்கழிக்குக.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

புதுமுயற்சிகளில் வெற்றி. சில புலங்களால்இலாபம் பனச்சஞ்சலம் பெரும் பொறுப்பேற்பு முதலியவை ஏற்படும், ஞாயிறு திங்கள் செவ்வாய் எச்சரிகையோடு கழிய வேண்டும்.

**கடகராசி** புநர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

சண்டைககு முந்துதல் குடும்பத்தகராறு உண்டாம், புதன் வியாழனை எச்சரிக்கையாககழிக்குக. மிகுதி நாட்கள் புதியமுயற்சிகளுககுச் சாதகமானவை,

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

வேலைகளில் எதிர்ப்புகளும் தடைகளும், அவற்றைத் தாண்டுகிற திறமையும், எதிரிகளுக்கு இடையூறும் ஏற்படும். இறுதி இருநாட்களையும்எச்சரிக்கையாகக் கழிககுக.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

தொழிற்சிறப்பும், பொறுப்புகளில் அநேகமாக வெற்றியும் சிறு உடல் கண் சுகவீனங்களும் உண்டாம்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

தந்தைவழி உறவினரால் தொல்லையும், எண்ணப்படி நடந்து கொள்வதில் இடரும் சிலபுலங்களால் இலாபமும் ஏற்படும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

பணமளவில் நன்மையும் விவசாய வெற்றியும் அந்நியர் அயலவர் உதவியும சிறு உடல்நிலைக கோளாறும ஏற்படும்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

குடும்ப கலகமும், இல்லறத் துணைபற்றிய தவறுனவிளககமுபுதுமுயற்சியில் தடங்கலும் தந்தைவழி உறவினரால் தொல்லையும ஏற்படும.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

எல்லா அலுவல்களிலும் கவனமாகஇருக்கவேண்டும். நண்பரின் தொல்லையும் வேண்டாததகாத கண்டனங்களும்உடல்நிலைககுழப்பங்களும் உண்டாம்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம்; சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

பணவருவாய் நீடிப்பும், குடும்பத் திருப்தியின்மையும், சிம்மதியீனமும் சிறு சுகவீனங்களும் உண்டாம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

எதிரிகளுக்கு இடரும் விவசாய ஈடுபாடுகளில் வெற்றியும அதிக வேலையும தாயாருககுச் சுகவீனமும் ஏற்படும்,

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டிலே
இல. 16. இரண்டாம் ஒழுங்கை
நீராவியடி யாழ்ப்பாணம.
1. சின்னத்தம்பி தம்புவும்
2. கதிரேசு சுப்பிரமணியமும் பெண்
3. தவமணியும்
வழக்காளிகள்.

இல: M.B 3996.
எதிராக
தெல்லிப்பழை, வீமன்காமம்
தம்பிப்பிள்ளை சிவஞானம்
—எதிராளி,

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M.B 3996-ம் இலகக வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிககப்படும் ஒருதுண்டுக்காணி 1963 ஆ ஆவணி மீ 8உ வியாழக்கிழமை (8-8-1963) முற்பகல் 10 மணி தொடக்கம் அக்காணிககுள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைததொகை:-முதல்வட்டி ரூபா, 9095-ம். மேலும் 4-5-61 தொடக்கம் 12-6-62 வரை ரூபா 8500-க்கு 12% வட்டியும் கூடிய தொகைக்கு 12-6-62 தொடக்கம் இறுபடும்வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 327-70 ம். ஆனால் இத்தொகையில் எதிரியால் கோட்டில் கட்டப்பட்ட ரூபா 5000 கழிபட வேண்டும்.

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று பழை இறை "தோப்பும் தோப்புப்புதுக்காடும்" வி பர. 11 குளி 13-ம். பனைகளும் செய்பயிர் வான்பயிர்களும். தெற்கெல்லையில் இருககும் கிணற்றில் அரைவாசிப்பங்கும். இதற்கெல்லை கிழக்கு தருமமடமும் மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயிலுக்குரிய ஆதனமும், வடக்கு காலஞ்சென்ற இலகுப்பிள்ளையின் [illegible] [illegible] கந்தையா தம்பிப்பிள்ளையினுதனம். இதில் அரைவாசிக்கு நிந்தமாகத்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இறெகறீஸ் ரேட், கொழும்பு
கந்தையா பாலேந்திரன்
—வழக்காளி,

வழக்கு இல. M B. 4452.
எதிராக
தலையாளி, வண்-கிழக்கு,
யாழ்ப்பாணம்.
1. தம்பு சின்னத்தம்பி
2. சின்னத்தம்பி பெண்
பவானி —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4452-ம் இலகக வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிககப்படும் ஒருதுண்டுக் காணி 1963-ம் வருடம் ஆவணிமாதம் 10-ந்திகதி (10-8-63) சனிககிழமை காலை 10-30 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரசிதத ஏலததில் என்னால் விற்கப்படும்

தீர்வைத்தொகை:-ரூபா 3258-ம் 16-12-1961தொடக்கம 7-6-1962 வரைககும் ரூபா 2500-க்கு 10வீத வட்டியும், அதன்பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைககும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 221-50 சதமும்.

காணி விபரம்:

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணை கோயிற்பற்று, வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை, "கொண்ணியாநதறை" நிலப்பரப்பு 3 குளி 13½. வீட்டுக்குத் தெற்குப்புறமாக வி. பர. (5) ஐந்து குளி (15½) பதினைந்தரையும். இதற்கெல்லை வடக்கு இதன் மிகுதியாதளம், கிழக்கு தருமமடமும் மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயிலாதனமும், மேற்கு ரோட்டு, தெற்கு கந்தையா தம்பிப்பிள்ளையினுதனம், இதடங்கலும்.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
இல:45, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம், 2-7-63.
M 67 5-7-63.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

இல M B 4197
வண்ணார்பண்ணை கிழக்கு
முருகேசு கைம்பெண் நாகரத்தினம். - வழக்காளி.
எதிராக
யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி சண்முகம் ஸ்ரோஸ் செல்லப்பா சற்குருநாதன் தனது பெற்றார் வேலணை மேற்கு தனையசிங்கம் செல்லப்பாவினதும் பெண் சிவபூரணத்தினதும் சட்டபூர்வமான பிரதிநிதி.
எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4197-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு தண்டுக் காணியை 1963-ம் ஸு ஆவணி மீ 3 ம் உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 1873-00 ம் 16-8-61 தொடக்கம் 14-3-62 வரைக்கும் ரூபா 1000 க்கு 12 வீதவட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வித வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 239-77 (செலவழித்ததொகை ரூ 175-70; வெளியாத்துச் செலவு ரூ 35-77; ஏற்படக்கூடிய செலவு ரூ 28-50).

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக், தீவுப்பகுதிவேலணைக் கோவிற்பற்று வேலணை கிழக்கிறை "நாகன் தோட்டம்" நில பர 22. இதில் மேற்குப் பக்கமாக நில பர 14½யும் வீடும். கிணறும் பனைகள் தென்னைகள் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும். இதற்கு எல்லை கிழக்கு கதிர்காமு கந்தசாமிக்கும் பெண் தங்கம்மாவுக்குமுரிய இதன் மிகுதிக் காணி. வடக்கு கதிர்காமன் கைம்பெண் பொன்னிக்குரிய ஆதனங்களும் ஒழுங்கை முகப்பும். சுப்பன் கயிலனுக்கும் வைரமுத்து கந்தையாவுக்கும் நாகமுத்தன் ஐயனுக்குமுரிய ஆதனங்களும். மேற்கு நாகலிங்கம் பொன்னையாவுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். தெற்கு அம்பலவாணர் கந்தையாவுக்கும் பங்காளருக்கும் மூத்ததம்பி சோமசுந்தரத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள்.

அ. வெற்றிவேலு
கொமிஷனர்.
19, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம், 29-6-63.
M. 61 5-7-63.

---

டில் பங்கும் செய்பயிர்களும். எல்லை கிழக்கு வைத்திலிங்கம் கைம்பெண் செல்லமுத்துவுக்கும் பங்காளருக்கும் இரத்தினம் பெண் அன்னம்மாவுககுமுரிய ஆதனம். வடக்கு ஒழுங்கை, மேற்கு செல்லப்பா சேனுதிராசாவுக்கும் சுகிர்தம்மாவுக்குமுரிய ஆதனம். தெற்கு வைத்திலிங்கம் நாகலிங்கத்தின் உரிமையாளருக்கும் வைத்திலிங்கம் கைம்பெண் செல்லமுத்துவுக்குமுரிய ஆதனங்கள், இதடங்கலும் அதன் உடமைகளும்.

சே. பாண்டித்துரை
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer
மல்லாகம், 28-6-63.
M 59 5-7-63.


---


## இந்துசாதனம்

திருத்திய வருடசந்தாவிகிதம்

| உள்நாடு | |
|---|---|
| ஆங்கிலம் | 9-00 |
| தமிழ் | 9-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 12-00 |
| **வெளிநாடு** | |
| ஆங்கிலம் | 10-50 |
| தமிழ் | 10-50 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-50 |
| கல்வி நிலையங்களுக்கு | 4-50 |


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




## COMMISSION SALE
## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை
டிஸ்திறிக்கோட்டு வழக்கு
இல. 7106.

வழக்காளி: ஆள்வாப்பிள்ளை கைம்பெண் முத்துப்பிள்ளை
—புலோலி மேற்கு.

எதிராக:

எதிரிகள்: முத்துக்குமாரசுவாமி பாலசுந்தரமும் (2) பெண் சிவகாமலட்சுமி, (3) அருட்பிரகாசம் சபாரட்டினமும், (4) பெண் செல்லப்பாக்கியம், எல்லோரும் வல்வெட்டித்துறை.

மேற்குறித்த இலக்க வழக்கின் தீர்ந்த தீர்வைப்படியும், குறித்த கோட்டார் எனக்கு அனுப்பிய கொமிஷன் அதிகாரப்படியும், இதன்கீழ்க் காட்டப்படும் ஆதனம் 1963-ம் ஆ புரட்டாதி மீ 14-ந்உ (14-9-63) சனிக்கிழமை முற்பகல் 10மணியளவில் குறித்த ஆதனவிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனடாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக வடமராட்சிப்பகுதி, உடுப்பிட்டிக்கோயிற்பற்று வல்வெட்டித்துறை, "சத்திரந்தை" நில.பர: வீடு 1 டிஷில. பர 5¼. இவைகளில் 1/6 பங்குக்குரிய நிலம் குளி 17 இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு 3-ம் 4-ம் எதிரிகளுக்கும், மறுபேருக்குமுரியவாதனம், மேற்கு தம்பிராசா பெண் ரேசை மரியரெத்தினத்திற்கும் மறுபேருக்குமுடையவாதனம், தெற்கு கையொழுங்கை. இவ்வெல்லைக்குட்பட்ட நிலம். கல்வீடு, குசினி, கிணறும், தென்னை முழுவதும்,

தீர்வைத்தொகை: 7775-00. வட்டி 6,000-க்கு 7-7-1961 ல் இருந்து 26 - 10 - 1961 வரை 10 வீதப்படி 180-00. வட்டி 5வீதப்படி 7955-க்கு 27-10-61ல் இருந்து 17-6-63 வரை 666-00, மொத்தம்; 8621-00,

கா. முத்துக்குமாருஜயர்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer.
சங்கிதிவேல்,
பருத்தித்துறை. 22-6-63.
M. 64 5-7-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்
இல. M.B, 4523,

அனலைதீவு, கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் —வழக்காளி,

எதிராக

அனலைதீவு
1, கந்தையா குகதாசனும் பெண் சரஸ்வதியும்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B, 4523-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 2 துண்டுக் காணிகளை 1963-ம் ஆவணி மீ 10-ம் உ சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் அந்தந்தக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—முதல்வட்டி ரூபாய் 1750-ம் 15-1-62தொடக்கம் 12-9 62 வரைக்கும் ரூபாய் 1000 - க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—:—

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

உடுவில் சங்குவேலி வினைபொருள் உற்பத்தி விற்பனவு ஐக்கிய சங்கம் வரையறுத்தது.
உடுவில்.
— வழக்காளி.

இல. M. B 3561

எதிராக

யாழ்ப்பாணம் உடுவில்
1. கந்தையா நமசிவாயமும்பெண்
2. அன்னம்மாவும்.
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 3561 இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1963ஆ. ஆவணி மீ 6 உ செவ்வாய்க்கிழமை (6-8-1963) முற்பகல் 10 மணி தொடக்கம் அக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 1498-30ம். இன்னும் ரூபா 1350 க்கு 15-8-60 தொடக்கம் 10-1-61 வரை 5 வீத வட்டியும் கூடிய தொகைக்கு இறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூ 187-95.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோவிற்பற்று உடுவில் இறை "என்னியாரொல்லை" நி ப (10) பத்தும் அதற்குரியவைகளும். இதற்கெல்லை கிழக்கு சங்கரப்பிள்ளை பெண் தங்கத்தினுதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு கணபதியார் பெண் சேதுப்பிள்ளையினுதனம். தெற்கு பொன்னம்பலம் பெண் அன்னம்மாவினுதனம். பதிவு யாழ்ப்பாணம் H 105/250.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்,
45, 4-ம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 1-7-63.
M 60 5-7-63

இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 193-60ம் (செலவழித்த தொகை ரூபா 139-45; வெலியாத்துச் செலவு ரூபா 35-15; ஏற்படக்கூடிய செலவு ரூபா 19-00). இதில் ரூபா 200 கொடுபட்டுள்ளது.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி அனலைதீவு கோவிற்பற்று அனலைதீவு இறை 1, வாரவயலும் அரசன்புலம் வயலும் நெற். பர. 10¾ பத்தே முக்கால். எல்லைகிழக்கு சுப்பிரமணியம் வேலுப்பிள்ளையினுதனமும் ஒழுங்கைமூகப்பும். வடக்கு பிள்ளையார் கோவிலுக்கும் முருகப்பர் கைம்பெண் ஐயாத்தைப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். மேற்கு சண்முகம் முத்துசுமாருவுக்கும் சாம்பசிவம் பெண் சொர்ணம்மாவுக்குமுரிய ஆதனங்கள். தெற்கு சாம்பசிவம் பெண் சொர்ணம்மாவுக்குமுரிய ஆதனம். இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

2. டிை சின்னத்தம்பி நாயன் வெளி நில பர 30 [illegible] எல்லை கிழக்கு சின்னத்தம்பி வேலுப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். வடக்கும்

## திருவாசகம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வினைப்பயன்களை ஊட்டி நம்மை ஈடேற்றும் முயற்சியில் ஒரு சிறிதும் தவறமாட்டார் என்ற உண்மையை உலகிற்குக் காட்ட; "பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து" என்னும் பாடலை மணிவாசகர் பாடியுள்ளார்.

பெற்றமனம் அன்பு நிரம்பியது. பிள்ளைமனம கல்லு என்று சொல்வார்கள். நமுடைய மனம் கல்லைப்போன்றது. கல்லினும்காட்டிக்கடினமாகிய இரும்புபோன்றது என்பது மணிவாசகர் காத்து "இரும்பு தரு மனத் தேனை ஈர்த்து என் என்புருக கரும்புறு சுவை எனக்குக் காட்டு உன் கழலிணைகள்" என்பது திருவாசகம். இறைவன் அருள் இரும்பை நிகர் மனத்தை இழுப்பதைக் கண்ணப்ப நாயனார் புராணத்தில் சேக்கிழார் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார். கண்ணப்ப நாயனார் மலையில் ஏறும்பொழுது தம் மனமாகிய இரும்பு இழுக்கப்பட்டு மாற நப்படுவதை உணர்கிறார்.

"ஆவதென் இதனைக் கண்டிங்கு
அணைதொறு மென்மேற் பாசம்
போவதொன் றுளது போலும்
ஆசையும் பொங்கி மென்மேல்
மேவிய நெஞ்சம் வேறோர்
விருப்புற விரையா நிற்கும்"

என்று திண்ணனார் கூறுவதாகக் காட்டப்பட்டுள்ளது. எனவே இறைவன் இழுக்க நாம் இழுபடுகிறோம். இதை விளக்கவே "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்றார் மணிவாசகர்.

இறைவன் ஓர் குணம், ஓர் உருவம், ஓர் செயல் இல்லாதவர். ஆனால் நாம் வணங்கி உய்ய பல உருவங்கள் தாங்கினார், அந்த அருள் உருவங்களை நாம் தரிசிக்கப் பெறும் பேற்றுக்காக மானுடப் பிறவியை எடுக்கலாம் என்பது பெரியோர் கருத்து. நாம இறைவனிடத்திலே கற்புடை மனைவி தன் நாயகனிடத்தில் செலுத்தும் புனிதமாகிய அன்பைச்செலுத்தவேண்டும் தாயுமானவரும் கற்புடை சிந்தை மாதர்போன்று யானும்தேவரீரையே மிக மேலானவராக மதிப்பேன் என்று கூறுகிறார். மணிவாசகரது திருத்தெள்ளேணம், திருவெம்பாவை, திருவம்மானைமுதலிய பாடல்களை இத்தொடரிலேதான் பாடியுள்ளார்,

இறைவனுடைய பாதங்களே எங்கள் பிறவித் துன்பத்தை நீக்கும் நிழல். இந்த நிழலிலே உலகின் உயிர்கள் தழைக்கின்றன

"நீல வேணி வாலிழை
பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை யுலகும்
முகிழ்ந்தன முறையே"

என்பது ஐங்குறுநூறுக் கடவுள் வாழ்த்து இறைபாதங்களின் இப்பெருமையை விளக்கவே,

"நமச்சிவாய வாழ்க
நாதன்றாள் வாழ்க"

எனச் சிவபுராணம் எடுத்தோதினார், அன்பினால அகங்குழைந்து திருவாசகம் படித்தால் நாம் கடைத்தேறுவது திண்ணம.

தெற்கும் வயித்தியநாதர் சுப்பிரமணியத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு ஐயம்பிள்ளை சபாபதிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதடங்கலிற் சொரியலாய் ½ அரைவாசி.

அ. வெற்றிவேலு,
கொமிஷனர்.
[illegible]
யாழ்ப்பாணம், 1-7-63.
M 62, 5-7-63,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—:—

வட்டுக்கோட்டை மேற்கு
சின்னப்பு சுப்பிரமணியம்
கைம்பெண் செல்லக்கண்ணு
—வழக்காளி

வழக்கு இல. M,B. 4269.

எதிராக

321, காவலர் வீதி, யாழ்ப்பாணம்.
1. சின்னத்தம்பி பொன்னுத்துரை
2. பொன்னுத்துரை பெண் நாகேஸ்வரி
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M,B 4269-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1963-ம் வருடம் ஆவணி மாதம் 17-ந்உ (17-8-63) சனிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்,

தீர்வைத் தொகை:- ரூபா 33095-83 சதமும், 21 - 9 - 61 தொடக்கம் 27-3-62 வரைக்கும் ரூபா. 20000-க்கு 7 வீத வட்டியும். அதன்பின் முழுத்தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 371-40 சதமும், கோட்டுச் செலவில் ரூபா 325-ம் கட்டப்பட்டுளது.

காணி விபரம்:

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று. வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை, "குத்தகைத்தோட்டம்" நிலப்பரப்பு3 குளி9 D 135/129ல் பதியப்பட்டது, (D 97/120-ல் பதியப்பட்ட நிலப்பரப்பு 3-ம் இன்னும் 9 குளியும் கூடியது. அந்த நிலப்பரப்பு 3 குளி 9-ம் D 95/287-ல் பதியப்பட்ட நிலப்பரப்பு 7 குளி 9 1/4ஆகிய முழுக்காணியில் பிரிக்கப்பட்ட மேற்குப்பாகம்), வீடும், கிணறும் மற்றும் அதிலுள்ள உடைமைகளும். எல்லை கிழக்கு வல்லிபுரம் ஐயாத்துரைக்கும், வல்லிபுரம் சரவணமுத்துவுக்குமுரிய ஆதனம், வடக்கு கதிரிப்பிள்ளை செல்லையாவின் ஆதனம். மேற்கு நாகப்பர் பொன்னம்பலத்தின் ஆதனம். தெற்கு ரோட்டு.

செ. பாண்டித்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer
மல்லாகம் 28-6-63,
M 58, 5-7-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக கோட்டில்
சிறுப்பிட்டி ஐக்கியகமத்தொழில் உற்பத்தி விற்பனவுச் சங்கம் பதிவு இல J. 1284, அதன்பிரதிநிதிகள்
1. சிறுப்பிட்டி வல்லிபுரம் மாணிக்கம்
2. டிை யூர் ஆறுமுகம்பொன்னையா இருவரும் டிை சங்கத்தின் தலைவரும் காரியதரிசியும்.
வழக்காளி.

இல. M B 3632

எதிராக

1. அச்செழு நீர்வேலி சரவணமுத்து செல்லையா
2. டிை யூர் சரவணமுத்துபொன்னம்பலம்
3. டிை யூர் சரவணமுத்து சங்கரப்பிள்ளை
4. டிை யூர் சரவணமுத்து கைம்பெண் சின்னப்பிள்ளை
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 3632ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி என்னால் 1963ம் ஆ ஆவணி மீ 10 ம் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 1236 - ம் ரூபா 1030- க்கு 27-1-1961 தொடக்கம் 25-4-1961 வரை 4 வீதமான வட்டியும் அதன்மேல் முழுதொகைக்கும் இறக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 217-65 சதம்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர்க் கோவிற்பற்று அச்செழு இறை "பெரியபுலம்" பரநீ இல பன்னிரண்டும் எட்டில் ஐந்தும் (பரநீ இல 12 5/8) கிணறும் எல்லை கிழக்கு சின்னத்தம்பி பெண் சிதம்பரத்திற்குரிய வாதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கும் தெற்கும் இளையதம்பி பெண் வள்ளிப்பிள்ளையின் ஆதனம், இதடங்கலிற் சொரியலாய் பரநீ இல மூன்று குளி பத்தும் பதினறில் ஐந்தும் (பரநீ இல 3 குளி 10 5/16).

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்,
1963-ம் ஆ ஆனி மீ 28-ம் உ
காரைநகர்,
M. 63 5-7-63.

யாழ்ப்பாணம்
## — ஐக்கிய இலாப நிதி —
1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 5-7-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org